| S–2619 |
|---|

| Sub. Code |
|---|
| 23BLT1C1 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2024**

**First Semester**

**இலக்கியம்**

**இக்கால இலக்கியம்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**ஓரிரு** வரிகளில் விடை தருக.

1. 'பெண்மைக்குணமுடையான்' – என்று பாரதியார் யாரைக் குறிப்பிடுகிறார்?

2. 'தொட்ட இடமெல்லாம் கண்ணில் தட்டுப்பட்டவள்' யார்?

3. 'அமுதசுரபியைத் தந்து சென்றவர்' என்று மு. மேத்தா யாரைக் குறிப்பிடுகிறார்?

4. மைக்கின் முன்னால் பேச்சுத்தவம் செய்கிறவர்கள் யார்?

5. 'ஜல்லிக்கட்டில் பசுமாடுகள்' தலைப்பு உணர்த்தும் பொருள் யாது?

6. 'விடியுமா?' – சிறுகதையின் ஆசிரியர் யார்?

7. சுரங்கம் – குறுநாலில் இடம் பெறும் இரு பாத்திரங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

8. 'சுரங்கம்' – தலைப்புப் பொருத்தத்தை விளக்குக.

9. 'கொல்லிப்பாவை' – நாடகம் இடம்பெறும் களம் யாது?

10. கொல்லிப்பாவை – நாடகத்தில் இடம்பெறும் காட்சிகள் எத்தனை?

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) 'காதல் பெரிது; எனக்குக் காசுபெரிதில்லை' யார் கூற்று? விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) 'முழுதும் காண ஒரு கோடிச் சிறகு வேண்டும்' என்று பாரதிதாசன் குறிப்பிடுவதற்கான காரணத்தை ஆராய்க.

12. (அ) தன்னிடம் பேட்டி காணும் கவிஞரிடம் செருப்பு உரைத்த செய்திகள் யாவை?

(அல்லது)

(ஆ) ஒரு கடிதம் அனாதையாகிவிட்டது, என்று மு. மேத்தா கூறுஉவதற்கான காரணங்களை எழுதுக.

13. (அ) 'ஒரு பிரமுகர்' கதை மூலம் ஜெயகாந்தன் உணர்த்தும் செய்தி யாது?

(அல்லது)

(ஆ) ஜல்லிக்கட்டில் பசுமாடுகள் கதையில் இடம்பெறும் சிக்கல் யாது? அதன் வழி கதாசிரியர் எடுத்துரைக்கும் கருத்தினை எழுதுக.

14. (அ) சுரங்கம் – குறுநாவலின் மையக்கரு யாது?

(அல்லது)

(ஆ) சுரங்கம் – குறுநாவலின் கதைத்தளம் யாது? அது குறித்த விளக்கத்தை ஆசிரியர் வழிநின்று விளக்குக.

15. (அ) கொல்லிப்பாவை நாடகத்தில் இடம்பெறும் பெண் கதாபாத்திரங்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) அரிசில்கிழார் – இரும்பொறை இருவருக்கும் இடையில் நடந்த உரையாடலைக் குறிப்பிடுக.

பகுதி இ (3 × 10 = 30)

பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. மனித உறவுகளைக் கண்ணன் பாட்டின் மூலம் பாரதியார் எவ்வாறு புலப்படுத்துகிறார்? விளக்குக.

17. 'கண்ணீர்ப் பூக்கள்' கவிதைத் தொகுப்பில் இடம்பெறும் சமுதாயம் சிந்தனைகளை விளக்கிக் கட்டுரை தருக.

18. 'அம்புப்படுக்கை' சிறுகதையின் சிறப்பியல்புகளை விளக்கிக் கட்டுரை எழுதுக.

19. 'சுரங்கம்' குறுநாவலில் இடம்பெறும் தொழிலாளர்களின் வாழ்வியலை விவரிக்க.

20. வரலாற்றுச் செய்தியை நாடகமாக்குவதில் வல்லவர் ஆறு அழகப்பன் என்பதை நும் பாடப்பகுதி கொண்டு நிறுவுக.

———————

| S–2620 |
|---|

| Sub. Code |
|---|
| 23BLT1C2 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2024**

**First Semester**

**இலக்கியம்**

**நன்னூல் எழுத்தும் யாப்பருங்கலக்காரிகையும்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளி.

1. நூலின் வகைகள் யாவை?

2. மாத்திரை என்பது யாது?

3. பகுபத உறுப்புக்களைக் குறிப்பிடுக.

4. விரவுப் பெயர் என்றால் என்ன?

5. வடமொழிப் புணர்ச்சி எத்தனை வகைப்படும்? அவை யாவை?

6. சாரியை என்றால் என்ன?

7. அளபெடை விளக்குக.

8. அசை என்றால் என்ன? அதன் வகைகளைக் குறிப்பிடுக.

9. பாக்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

10. சுரிதகம் – விளக்குக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) பாடம் கேட்கும் தன்மை குறித்து நன்னூல் கூறுவனவற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) எழுத்துசாரியைக் குறித்தெழுதுக.

12. (அ) செய்யுள் விகாரம் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) குற்றியலுகர ஈற்றுத் திசைப் பெயர்ப் புணர்ச்சியை எழுதுக.

13. (அ) 'அகம்' என்ற சொல்லின் புணர்ச்சியைக் குறித்தெழுதுக.

(அல்லது)

(ஆ) 'அத்து' சாரியை முதல் எழுத்து கெடும் என்பதை உருபு புணரியல் வழி விளக்குக.

14. (அ) அளபெடைகளின் வகைகளை விவரி.

(அல்லது)

(ஆ) தளைகளின் வகைகளை எடுத்தெழுதுக.

15. (அ) ஆசிரியப்பாவின் வகைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) கொச்சகக் கலிப்பாவின் வகைகள் குறித்துதெழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

ஏதேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. நன்னூல் கூறும் பத்துக் குற்றங்களை எடுத்துரைக்க.

17. எண்ணுப் பெயர்களின் புணர்ச்சி விதிகளை உயிரீற்றுப் புணரியல் வழி வெளிப்படுத்துக.

18. உருபு புணரியல் வழி வேற்றுமை உருபுகளின் புணர்ச்சியை எடுத்துரைக்க.

19. சீர் மற்றும் அதன் வகைகளைப் புலப்படுத்துக.

20. கலிப்பாவின் இலக்கணம் மற்றும் உறுப்புகள் குறித்து கட்டுரைக்க.

———————

| S–2621 |
|---|

| Sub. Code |
|---|
| 23BLTA1 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2024.**

இலக்கியம்

இயைபுப்பாடம் – தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும்

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours                                        Maximum : 75 Marks

பகுதி அ                                        $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு தொடர்களில் விடை தருக.

1. தமிழ் எழுத்துக்களுடன் சிந்துவெளி எழுத்துக்கள் தொடர்புடையன எனக் குறிப்பிட்டவர் யார்?

2. ‘யவனப் பிரியா’ எனப்படும் பொருள் யாது?

3. மூவேந்தர்களில் தொடர்ச்சியான வரலாறு உடைய அரசர்கள் யார்?

4. புனையா ஓவியம் என்றால் என்ன?

5. கங்கர் இனமே களப்பிரர் இனம் எனக் குறிப்பிட்டவர் யார்?

6. பல்லவர் கலையின் கொடுமுடி எது?

7. பிற்காலச் சோழர் மரபைத் தோற்றுவித்தவன் யார்?

8. ‘தென் இந்தியாவின் மிகச்சிறந்த அரசர்களுள் ஒருவன்’ எனப் போற்றப்படும் பாண்டியன் யார்?

9. கப்பலேட்டிய தமிழன் யார்?

10. சேது சமுத்திரக் கால்வாய்த்திட்டம் எவ்விரு நதிகளுக்கு இடையே ஏற்படுத்தப்பட்டது?

பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) கல்வெட்டுக்கள் உணர்த்தும் தமிழக வரலாற்றுச் செய்திகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) தமியுகம் உரோமுடன் கொண்ட வணிகத் தொடர்பை விளக்குக.

12. (அ) சங்கம் இருந்த காலம் பற்றிய ஆய்வாளர் கூற்றுகளைப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) சங்ககாலக் கல்வி நிலை குறித்து எழுதுக.

13. (அ) களப்பிரர் பற்றிய அறிய உதவும் ஆதாரங்கள் யாவை?

(அல்லது)

(ஆ) பல்லவர் காலச் சமயநிலை பற்றி எழுதுக.

14. (அ) முதலாம் மாறவர்மன் சுந்தரப்பாண்டியன் குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) சோழர்களது வீழ்ச்சி பற்றி எழுதுக.

15. (அ) மூக்கறுப்புப் போர் - குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) விடுதலைக்குப் பின் தமிழகத்தில் ஏற்பட்ட அறிவுத் துறை வளர்ச்சி பற்றி விளக்குக.

**பகுதி இ** (3 × 10 = 30)

**எவையேனும்** மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. தமிழ்ச்சங்கங்கள் பற்றி ஆய்வு செய்க.

17. சங்ககாலச் சமுதாயம் பற்றிக் கட்டுரைக்க.

18. பல்லவர்காலச் கலைகள் குறித்து எழுதுக.

19. பிற்காலச் சோழர்களது ஊரவை அமைப்புப் பற்றி விளக்குக.

20. விடுதலைப் போரில் தமிழகத்தின் பங்கு குறித்து விவரி.

———————

**S–2622**

| Sub. Code |
|---|
| 23BLT2C1 |

**B. Lit. DEGREE EXAMINATION, APRIL 2024**

**Second Semester**

இலக்கியம்

அற இலக்கியம்

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடையளிக்க.

1. எவருடைய இல்லத்தில் செல்வம் குறையாது இருக்கும் என வள்ளுவர் குறிப்பிடுகிறார்

2. பொருட்பாலில் தெரிந்து செயல்வகை அதிகாரம் எதனை உணர்த்துகிறது?

3. 'வானகமும் ஆற்றல் அரிது' - எப்போது என வள்ளுவர் குறிப்பிடுகிறார்?

4. 'ஞாலம் கருதினும் கைகூடும்' - எப்போது? வள்ளுவர் வழிநின்று கூறுக.

5. யாருடைய நட்பைக் கைவிட வேண்டும் என நாலடியார் கூறுகிறது?

6. நான்மணிக்கடிகையின்-ஆசிரியர் யார்?

7. இனியவை நாற்பது என்னும் நூலை இயற்றியவர் யார்?

8. நரகதி அடைவோர் யார்?

9. திரிகடுகம்-குறிப்பு வரைக.

10. "பாம்பறியும் பாம்பின் கால்" - இதனை பழமொழி நானூறு வழிநின்று பொருள் கூறுக.

**பகுதி ஆ** $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடையளிக்க.

11. (அ) இனியவை கூறுவதால் ஏற்படும் நன்மைகளாக வள்ளுவன் கூறுவனவற்றைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) 'அடக்கமுடைமை' அதிகாரத்தின் வழி வள்ளுவர் கூறுவன யாவை? விளக்குக.

12. (அ) 'வலியறிதல்' - என்னும் அதிகாரம் கூறும் கருத்துக்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'தெரிந்து தெளிதல்' அதிகாரம் வெளிப்படுத்தும் கருத்துக்களைக் குறிப்பிடுக.

13. (அ) 'கள்ளி வயிற்றில் அகில் பிறக்கும்', கள்வம் என்பார்க்குத் துயில் இல்லை, நிலத்துக்கு அணி என்ப நெல்லும், கரும்பும்-இப்பாடல்கள் உணர்த்தும் கருத்துகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'இன்னாமை வேண்டின் இரவு எழுக, பல்லினால் நோய் செய்யும் பாம்பெல்லாம், பறை நன்று பண்ணமையா யாழின்' - என்னும் பாடல்களின் வாயிலாக அறியப்படும் கருத்துக்களைக் குறிப்பிடுக.

14. (அ) கல்வியின் சிறப்புகள் குறித்து நீதிநெறி விளக்கம் கூறுவனவற்றைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) கொடுகோல் அரசனின் செயல்பாட்டினை நீதிநெறி விளக்கத்தின் வழி நின்று விளக்குக.

15. (அ) சான்றோர் செயல்கள், அறியாமையால் வரும் கேடு, சாகத் துணிந்தவன் செயல்கள் என திரிகடுகம் எவற்றை உணர்த்துகின்றன?

(அல்லது)

(ஆ) கூடாதவை, நட்பாகதாவர், இறவாப் புகழ்-என்பன குறித்து திரிகடுகம் உணர்த்தும் கருத்துக்களைக் குறிப்பிடுக.

## பகுதி இ (3 × 10 = 30)

பின்வரும் வினாக்களுக்கு எவையேனும் **மூன்றனுக்கு** கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. விருந்தோம்பல், செய்நன்றி அறிதல் அதிகாரங்களின் காணப்படும் கருத்துக்களைக் கட்டுரைக்க.

17. காலம் அறிதல், இடன் அறிதல்-அதிகாரங்கள் உணர்த்தவனவற்றைத் தொகுத்துரைக்க.

18. நாலடியார் குறிப்பிடும் பொறையுடைமை, ஈகை குறித்த கருத்துகளை ஆராய்க.

19. இனியவை நாற்பது உணர்த்தும் கருத்துகளை ஆராய்க.

20. பழமொழி நானூறு குறிப்பிடும் கருத்துகளைத் தொகுத்துரைக்க.

———————

| S–2623 |
|---|

| Sub. Code |
|---|
| 23BLT2C2 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2024**

**Second Semester**

**இலக்கியம்**

**நன்னூல் சொல்லதிகாரமும் தண்டியலங்காரமும்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு தொடர்களில் விடை தருக.

1. குழு உக்குறி- என்றால் என்ன?

2. வினையெச்சம் வாய்பாடுகளைக் கூறுக.

3. இரட்டைக்கிளவி - பொருள் தருக.

4. உவம உருபுகள் யாவை?

5. உயிரியல் என்றால் என்ன?

6. கடி என்னும் உரிச்சொல் உணர்த்தும் பல குணச் சொற்களைக் கூறுக.

7. அணி இலக்கணத்திற்கு இலக்கணம் கூறும் நூல் எது?

8. சிறுங் காப்பியம் - பொருள் தருக.

9. அணி என்பதன் பொருள் தருக.

10. தன்மையணி என்றால் என்ன?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) ஆகுபெயர் என்றால் என்ன? அதன் வகைகளுள் ஏதேனும் இரண்டினை விளக்குக.

(அல்லது)

(ஆ) இயல்பு வழக்கு, தகுதி வழக்கு குறித்து எழுதுக.

12. (அ) அன்மொழித் தொகையின் இலக்கணம் கூறி அதன் வகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) பல பொருள் ஒரு சொல் - குறித்து எழுதுக.

13. (அ) உயிரியல் உணர்த்தும் ஓரறிவு உயிர்கள் முதல் ஐந்தறிவு உயிர்களை குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) ஒரு குணம் தழுவிய பல உரிச்சொற்கள் குறித்து எழுதுக.

14. (அ) பொருங்காப்பியத்தின் இலக்கணத்தை தண்டியலங்காரம் எங்ஙனம் உரைக்கிறது?

(அல்லது)

(ஆ) தண்டியலங்காரச் செய்யும் வகைகளுள் முத்தகச் செய்யுள், குளகச் செய்யுள் குறித்து எழுதுக.

15. (அ) உவமையணி குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) உருவக அணி என்றால் என்ன? விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. நன்னூலில் வினைமுற்று உணர்த்தும் கருத்துக்களை எடுத்துரைக்க.

17. பொருள்கோள்களின் பெயரும் தொகையும் குறித்து கட்டுரைக்க.

18. இடையியல் குறித்து நன்னூல் குறிப்பிடும் கருத்துகளைத் தொகுத்துரைக்க.

19. செய்யுள் நெறி குறித்த செய்திகளை தண்டியங்காரம் வழி நின்று எடுத்துரைக்க.

20. வேற்றுமையணியின் இலக்கணம் கூறி அதன் வகைகளைத் தொகுத்தெழுதுக.

| S–2624 |
|---|

| Sub. Code |
|---|
| 23BLTA2 |

## B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2024

இலக்கியம்

இயைபுப்பாடம் — தமிழ் இலக்கிய வரலாறு

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours  Maximum : 75 Marks

**பகுதி அ**  ($10 \times 2 = 20$)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு** வரிகளில் விடையளிக்க.

1. எட்டுத்தொகை நூல்களுள் அக இலக்கியங்களைக் கூறுக.

2. பத்துப்பாட்டில் உள்ள ஆற்றுப்படை நூல்கள் யாவை?

3. 'நாளும் இரண்டு சொல்லுக்குறிது' - இதில் இடம்பெறும் நூல்களை எழுதுக.

4. இரட்டைக் காப்பியங்கள் யாவை?

5. பிள்ளைத்தமிழ்-குறிப்பு வரைக.

6. தமிழ் இலக்கண நூல்களுள் சிலவற்றைக் குறிப்பிடுக.

7. இசை நாடக இலக்கியங்களை எழுதுக.

8. சமண சமய கால இலக்கியங்கள் யாவை?

9. தமிழின் முதல் சிறுகதை எது? அதனை இயற்றியவர் யார்?

10. தமிழ் நாடகத்தின் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடையளிக்க.

11. (அ) தொல்காப்பியம் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) புறநானூறு, பத்திற்றுப்பத்து பற்றி விளக்குக.

12. (அ) சிறுபஞ்சமூலம், இனியவை நாற்பது ஆகியவற்றை குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) காப்பியத்தின் இலக்கணத்தை விளக்கி எழுதுக.

13. (அ) பிள்ளைத்தமிழ், குறவஞ்சி இலக்கியங்களின் அமைப்பு குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) பட்டினத்தார் குறித்த கருத்துக்களைக் குறிப்பிடுக.

14. (அ) சங்கரதாஸ் சுவாமிகளின் இசை நாடகங்கள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) சைவமும் தமிழும் என்ற பொருளில் கருத்துக்களைக் குறிப்பிடுக.

15. (அ) சிறுகதையின் இலக்கணத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) மரபுக் கவிதை, புதுக்கவிதை குறித்து எழுதுக.

பகுதி இ (3 × 10 = 30)

பின்வரும் வினாக்களுக்கு எவையேனும் **மூன்றனுக்கு** கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. பத்துப்பாட்டு இலக்கியங்களின் வாயிலாக அறியலாகும் கருத்துக்களைக் கட்டுரைக்க.

17. ஐம்பெருங் காப்பியங்கள் மனித வாழ்வியலுக்கு உணர்த்தும் கருத்துக்களை ஆராய்க.

18. தத்துவ இலக்கியங்களின் போக்கை ஆராய்க.

19. உரைநடையின் தோற்றம் வளர்ச்சி குறித்து கட்டுரைக்க.

20. தமிழ் நாவலின் தோற்றம், வளர்ச்சி குறித்து எடுத்துரைக்க.

———————

| S–2625 |
|---|

| Sub. Code |
|---|
| 23BLTA3 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2024**

இலக்கியம்

இயைபுப்பாடம் – தமிழ் இலக்கண வரலாறு

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours    Maximum : 75 Marks

பகுதி அ    $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு தொடர்களில் விடை தருக.

1. அகத்தியம் பொருள் விளக்கம் தருக.

2. ஐந்திலக்கண நூல்களைக் கூறுக.

3. புறப்பொருள் வெண்பா மாலையில் இடம் பெறும் திணைகளை எழுதுக.

4. யாப்பருங்கலம் – சிறுகுறிப்பு வரைக.

5. வெண்பா பாட்டியல் நூல் குறிப்பு எழுதுக.

6. நேமிநாதத்தின் நூல் அமைப்பினை எழுதுக.

7. பன்னிருப் பாட்டியலை இயற்றியவர் யார்?

8. நவநீதப் பாட்டியலின் நூல் அமைப்பைக் கூறுக.

9. மறைந்த போன இலக்கண நூல்களின் பெயர்களைக் கூறுக.

10. இலக்கண விளக்கத்தை மறுத்துரைக்கும் நூல் எது?

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) யாப்பிலக்கணம், அணியிலக்கம் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) நச்சினார்க்கினியரின் உரையின் தன்மையக் குறிப்பிடுக.

12. (அ) யாப்பருங்கலம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) கரந்தைத்திணை, வஞ்சசித்திணை குறித்துச் செய்திகளை விளக்குக.

13. (அ) நன்னூல் குறித்த கருத்தினைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) வீரசோழியத்தின் நூல் அமைப்பினைக் குறிப்பிடுக.

14. (அ) சிதம்பரச் செய்யுட் கோவை குறித்து நீவிர் அறிவன யாவை?

(அல்லது)

(ஆ) வரையறுத்தப் பாட்டியலில் இடம் பெறும் கருத்துக்களை விளக்குக.

15. (அ) பிரயோக விவேகம் என்ற இலக்கண நூல் குறித்து எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) இலக்கணக் கொத்து நூலின் இயல்பைக் குறிப்பிடுக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. இறையனார் அகப் பொருள் குறித்துச் செய்திகளைக் கட்டுரைக்க.

17. யாப்பருங்கலக் காரிகை குறித்து நீவிர் அறியும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

18. தண்டியலங்காரத்தின் செய்திகளைக் கட்டுரையக்க.

19. நவநீதப் பாட்டியலில் இடம் பெறும் கருத்துக்களைப் புலப்படுத்துக.

20. இலக்கண நூல்கள் என்ற தலைப்பில் அமைந்துள்ள செய்திகளை விளக்குக.

| S–2626 |
|---|

| Sub. Code |
|---|
| 23BLTA4 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2024**

**இலக்கியம்**

**இயைபுப்பாடம் – கல்வெட்டியல்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. தமிழகத்தில் வழங்கிய மிகத் தொன்மையான தமிழ் எழுத்தின் பெயரைக் கூறுக.

2. 'க' என்னும் எழுத்தின் தொன்மை வடிவத்தை எழுதுக.

3. மா என்பதன் அளவீடு யாது?

4. முந்திரி – குறிப்பு வரைக.

5. கல்வெட்டைப் படி எடுப்பதற்கு பயன்படுத்தப்படும் மை எப்பொருட்களால் தயாரிக்கப்படுகிறது?

6. இந்தியாவின் பழைமையான வரலாற்றை அறிய கல்வெட்டுகள் துணை நிற்கும் என்று கூறிய வெளிநாட்டு அறிஞர் யார்?

7. கல்வெட்டுகளில் காணப்படும் சீப்பு என்னும் உருவம் எச்சொல்லைக் குறிப்பிடுகிறது?

8. நாள் எழுத்து – குறிப்பு வரைக.

9. பாண்டியர் காலச் செப்போடுகளில் எவையேனும் நான்கினை மட்டும் எழுதுக.

10. பல்லவர் காலச் செப்பேடுகளில் காணப்படும் மங்கலச் சொற்கள் யாவை?

பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) எழுத்தின் தோற்றத்தைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) பல்லவர் காலத் தமிழ் எழுத்துகள் குறித்து விளக்குக.

12. (அ) கிரந்த எழுத்தின் வளர்ச்சி நிலைகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) கிரந்த எழுத்துகள் தரும் வரலாற்றுச் செய்திகளைக் குறிப்பிடுக.

13. (அ) கல்வெட்டைப் படி எடுக்கும் முறையை விளக்குக.

(அல்லது)

(ஆ) கல்வெட்டு ஆய்வில் தனியார் அமைப்புகள் செய்த பணிகளைக் குறிப்பிடுக.

14. (அ) பண்டைய ஓவியம், பானை ஓடுகளில் காணப்படும் உருவ எழுத்துகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) எழுத்துக்கலை குறித்து ஏ.சி.ஹாடன் கூறும் கருத்துகள் யாவை?

15. (அ) திருவாலங்காடு செப்பேடு குறிப்பிடும் கருத்துகளை விளக்கி உரைக்க.

(அல்லது)

(ஆ) பல்லவர் காலச் செப்பேடுகளின் அமைப்பு முறை குறித்து விளக்குக.

**பகுதி இ** (3 × 10 = 30)

பின்வரும் வினாக்களுக்கு எவையேனும் **மூன்றனுக்கு** கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. தமிழ் எழுத்து வாயிலாக அறியப்படும் கருத்துகளைக் கட்டுரைக்க.

17. தமிழில் எண்கள்களும் அளவைகளும் குறித்து விவரி.

18. தமிழகக் கல்வெட்டாய்வு குறித்து எடுத்துரைக்க.

19. உருவ எழுத்துகளும் அவை உணர்த்தும் பொருள்கள் குறித்தும் கட்டுரைக்க.

20. சோழர் காலச் செப்போடுகளின் வழி அறியலாகும் வரலாற்றுச் செய்திகளைத் தொகுத்துரைக்க.

———————